Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 294/2024

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கரும்பு வெட்டும் வேலை |
| பெயர். | - | ரமேஷ் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | சுப்பிரமணி | சமயம் | - | |
| கிராமம் | - | அருங்குறுக்கை | வயது | - | 34 |

07.01.2026

4 வது எதிரி ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அருங்குறுக்கை கிராமத்தில் வசித்து கரும்பு வெட்டும் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு கொரக்கந்தாங்கலிலுள்ள எனது மாமியார் வீட்டிற்கு நானும், பரமசிவன் மற்றும் சதீஷ் ஆகியோர்கள் சென்று நெல் அறுக்கும் வேலையை செய்வதற்காக அழைத்திருந்தார்கள். நாளைக்கு வந்து செய்கிறோம் என்று சொல்லிவிட்டு நாங்கள் மூவரும் மாலை 06.00 மணியளவில் ஏரி அருகே வந்து கொண்டிருந்த போது எதிரிகள் நான்கு பேரும் எங்களை மறித்து வெளியூர் ஆளுங்களுக்கு இங்க என்ன வேலை என்று சொல்லி பைக் சாவியை பிடுங்கி கொண்டார்கள்.

2. நாங்கள் ஊரில் சென்று சொன்னதற்கு நாளை காலை வந்து பேசிக்கொள்ளலாம் என்று அனுப்பிவிட்டார்கள். மறுநாள், காலை 07.00 மணியளவில் வடமலையனூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள டீ கடையில் நானும், எங்கள் ஊர் தலைவர் , வடமலையனூர் தலைவர் மற்றும் முக்கியதஸ்தர்களுடன் பஞ்சாயத்து பேசிக்கொண்டிருந்த போது எதிரிகள்

நால்வரும் வந்து எங்கள் ஊரிலேயே வந்து பஞ்சாயத்து பேசுறியா என்று சொல்லி அடிக்க வந்தார்கள்.

3. எதிரிகள் தடி, ராடு ஆகியவற்றால் அய்யனாரை நெற்றியில் தாக்கினார்கள். அதில் அய்யனாருக்கு நெற்றியில் அடியும், சாமிதுரைக்கு முதுகில் தடியால் அடித்தார்கள். எதிரிகளின் பெயர் தெரியவில்லை, அடையாளம் தெரியும். சதீஷ்குமாருக்கு வலது காலில் தடியால் அடித்தார்கள். மேற்படி சம்பவத்தில் எனக்கு எதுவும் காயம் ஏற்படவில்லை.

4. காயமடைந்தவர்களை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக விழுப்புரம் பணத்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்றோம். அங்கு ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இந்த வழக்கானது 2017 வருடத்திய வழக்கு என்று எடுத்து கூறியும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(Sd/-R.Senthilkumar)**
**D.M-cum-JM,**
**T.V.Nallur.**